## சுருக்கம்

அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம், சென்னை –40 – பயிற்சி மையத்தில் அழைப்பு விரிவுரையாளர்களுக்கு (Guest Lecturers) மதிப்பூதியத்தை (Honorarium) ரூ.500/–லிருந்து ரூ.750/– ஆக உயர்த்தி வழங்க – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி.3 ) துறை

அரசாணை (நிலை) எண். 59

நாள். 14.6.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042
வைகாசி 31

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.159, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.3) துறை, நாள் 17.9.1997
2. இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் பயிற்சித் துறை தலைவர், அவர்களின் கடித எண். டிஜிட்டி/142/2009, நாள் 12.09.2009, 8.7.2010 மற்றும் 29.03.2011.

*****

ஆணை:

ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் இதர இந்திய குடிமைப்பணிகளில் சேருவதற்கான சிறப்புப் பயிற்சியை சென்னை அண்ணாநகரிலுள்ள அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம் அளித்து வருகின்றது. இம் மையம் அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென 1966–இல் தொடங்கப்பட்ட முன் தேர்வு பயிற்சி மையமும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மற்றும் இதர வகுப்பினர் ஆகியோருக்கு பயிற்சி அளித்திட 1971–இல் தொடங்கப்பட்ட தனிப்பயிற்சி நிலையமும் ஒருங்கிணைக்கப்பட்டு, சென்னை அண்ணாநகரில் "இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையம்" என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

2. பார்வை 1–ல் படிக்கப்பட்ட ஆணையின்படி, சென்னை, முன்தேர்வு பயிற்சி மையத்தில் பணிபுரியும் அழைப்பு விரிவுரையாளர்களுக்கு மதிப்பூதியத்தை மைய அரசின் வழிகாட்டிகளில் கூறியுள்ளபடி மைய அரசால் பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் இந்திய ஆட்சிப் பணிகளுக்கான தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கும் அழைப்பு விரிவுரையாளர்களுக்கு மதிப்பூதியத்தை இரண்டு மணி நேர கால அளவு விரிவுரைக்கு ரூபாய். 500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

3. தற்போது அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை தலைவர் அவர்கள் பார்வை 2–ல் படிக்கப்பட்ட கடிதத்தில், அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மைய அழைப்பு விரிவுரையாளர்கள் (Guest Lecturers), வெளி ஊர்களிலிருந்தும், சென்னையில் பல்வேறு இடங்களிலிருந்தும் பயிற்சி மையத்திற்கு வருவதால் ஏற்படும் போக்குவரத்து செலவும்

இதர செலவுகளும் கூடுதலாக உள்ளது என்றும். இது தவிர, தற்போதுள்ள பல்வேறு தனியார் குடிமைப்பணி பயிற்சி மையங்கள் அழைப்பு விரிவுரையாளர்களுக்குக் கூடுதல் மதிப்பூதியம் வழங்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார். அதனால், அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையத்தில் தற்பொழுது பணிபுரியும் திறமை மிகுந்த அழைப்பு விரிவுரையாளர்கள் (Guest Lecturers), தொடர்ந்து மையத்தில் அதிக அளவில் தேர்ச்சியினைக் கொடுப்பதற்கும் அழைப்பு விரிவுரையாளர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டு 10 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், பயிற்சி மையத்தில் பணிபுரியும் அழைப்பு விரிவுரையாளர்களின் கோரிக்கையினை ஏற்று, தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியத்தை ரூ.500/–லிருந்து ரூ.750/– (ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்) ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

4. மேற்குறித்த அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் மற்றும் பயிற்சித் துறை தலைவரின் கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசீலித்து அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வு பயிற்சி மையத்தில் பணிபுரியும் அழைப்பு விரிவுரையாளர்களுக்கு இரண்டு மணி நேரத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியத்தை ரூ.500/– லிருந்து ரூ.750/– (ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்) ஆக உயர்த்தி வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் மதிப்பூதிய உயர்வு நடைமுறைக்கு வரும்.

5. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித் துறையின் அலுவல் சாரா பற்று எண்.30300/படி/2011, நாள். 13.06.2011.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ. இறையன்பு
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம் (ம) பயிற்சி துறை தலைவர்
"மகிழம்பூ" 163/1 ப்பி. எஸ். குமாரசாமி ராஜாசாலை, சென்னை 28.
முதல்வர், அகில இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையம், சென்னை–40.
செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –9.
செயலர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை–5.
இயக்குநர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை –9/18/35.
மாநில கணக்காயர், சென்னை –18/35.

நகல்:
சட்டம், நீதி மன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்.
நிதி (வருவாய் /பொது/ படிகள்) துறை. சென்னை –9.
ப.ம.நிசீ (நி.சீ.2 /பயிற்சி.1) துறை, சென்னை –9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/6/11

பிரிவு அலுவலர்

15/6/2011